**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 43** **நாள்: 28.03.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சாலைகளில் போக்குவரத்திற்கு இடையூறாக விடப்படும் மாடுகளின் உரிமையாளர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுற்றித்திரியும் மாடுகளை கட்டுப்படுத்தும் பொருட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியால் மன்றத்தீர்மான எண்,760/2017, நாள் : 24.11.2017ல் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சாலைகளில் சுற்றித்திரியும் பசு, எருமை மற்றும் காளை மாடுகளை கால்நடை பிடிக்கும் வாகனங்களின் மூலம் பணியாளர்களால் பிடிக்கப்பட்டு புதுப்பேட்டை 'டி', பெரம்பூர் 'ஜி' ஆகிய மாட்டுத்தொழுவங்களில் அடைக்கப்பட்டு வருகிறது. தொழுவங்களில் அடைக்கப்பட்ட மாடுகளுக்கு கடந்த ஆண்டுகளில் மூன்று வயதிற்குட்பட்ட கால்நடைகளுக்கு ரூ.1000/–மும், மூன்று வயதிற்கு மேலுள்ள கால்நடைகளுக்கு ரூ.1250/–மும், மேலும், மூன்று நாட்கள் பராமரிப்பு செலவாக நாளொன்றுக்கு ரூ.100/– வீதம் மொத்தம் ரூ.1550/– அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டு வந்தது. கடந்த 2011–2012 முதல் 2017–2018 அக்டோபர் வரை 7206 மாடுகள் பிடிக்கப்பட்டு, ரூ.1,13,49,950/– அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது அபராதம் உயர்த்தப்பட்டுள்ளது. அதன்படி, 2018–2019ம் நிதி ஆண்டிலிருந்து (01.04.2018) அபராதத்தொகை ரூ.10,000/–மும் ஒரு மாட்டிற்கு 3 தினங்களுக்கு பராமரிப்பு செலவாக ரூ.750/– ஆக மொத்தம் ரூ.10,750/– அபராதத் தொகையாக உயர்த்தி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

2018ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் 147 மாடுகள் பிடிக்கப்பட்டு, ரூ.2,68,500/– அபராதமும், பிப்ரவரி மாதத்தில் 151 மாடுகள் பிடிக்கப்பட்டு, ரூ.2,60,850/– அபராதமும், மார்ச் மாதம் 28ம் தேதி

வரையில் 124 மாடுகள் பிடிக்கப்பட்டு, ரூ.2,25,750/– அபராதம் என மொத்தம் 422 மாடுகள் பிடிக்கப்பட்டு ரூ.7,55,100/– அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது.

இனிவருங்காலங்களில் பெருநகர சென்னை மாநகராட்சியால் பிடிக்கப்படும் கால்நடைகளுக்கு அடையாளமாக காதுமடலில் பெருநகர சென்னை மாநகராட்சி வரிசை எண்கள் அடிப்படையில் முத்திரை வில்லை பொருத்தப்படும்.

முத்திரை வில்லை பொருத்தப்பட்ட கால்நடைகள் மீண்டும் பிடிக்கப்பட்டால், அவைகள் தன்னார்வ தொண்டு நிறுவனங்களிடம் உரிய முறையில் ஒப்படைக்கப்படும். உள்ளூர் காவல்துறையின் ஒத்துழைப்புடன் மாடு பிடிக்கும் பணி மேற்கொள்ளப்படுவதுடன், உரிமையாளர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**